இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 309 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆனி 05 – வியாழக்கிழமை 19 ஜூன் 2025 – வெளியூர் 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 309 : Thiruvalluvar Year - 2056 - Aani 05 - Thursday 19 June 2025 - Dak 12 Pages ₹ 5.00



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.6.2025) சென்னை மாநகரில் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் 6.04 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள 50 கட்டணமில்லா குடிநீர் வழங்கும் தானியங்கி இயந்திரங்களை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக தொடங்கிவைக்கும் விதமாக, சென்னை, மெரினா கடற்கரை நீச்சல் குளம் அருகில் அமைக்கப்பட்டுள்ள கட்டணமில்லா குடிநீர் வழங்கும் தானியங்கி இயந்திரத்தை தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் கே.என்.நேரு, அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், துணை மேயர் மு. மகேஷ்குமார், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி. வினய், செயல் இயக்குநர் கௌரவ் குமார், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் நே.சிற்றரசு, மண்டல குழுத் தலைவர் மதன்மோகன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.6.2025) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை சார்பில் 217 கோடியே 98 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 26 திருக்கோயில்களில் 49 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, கட்டுமானப் பணிகளை தொடங்கி வைத்து, 21 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள உதவி ஆணையர் அலுவலகம், 15 ஆய்வர் அலுவலகங்கள் மற்றும் 16 திருக்கோயில்களில் 17 முடிவுற்ற பணிகளை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர் சி.பழனி, தலைமைப் பொறியாளர் பொ.பெரியசாமி, கூடுதல் ஆணையர் (திருப்பணி) பொ.ஜெயராமன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### கீழடி ஆய்வு: தமிழரின் தொன்மையை ஏற்க மறுக்கும் பா.ஜ.க. அரசைக் கண்டித்து – கழகத் தலைவரின் அறிவிப்பின்படி

# மதுரையில் மாணவர் அணி நடத்திய மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## பல்லாயிரக்கணக்கில் திரண்டு ஒன்றிய அரசுக்கு எதிராக முழக்கம்!

மதுரை, ஜூன் 19 -

**கீழடி அகழாய்வுகள் அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்பட்ட பிறகும் அதை ஏற்று ஆய்வு முடிவுகளை வெளியிட மறுக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி தி.மு.க. மாணவரணி சார்பில் மதுரையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் பல்லாயிரக்கணக்கானோர் கலந்துகொண்டு ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு எதிராக கண்டன முழக்கங்களை எழுப்பினர்.**

இந்த ஆர்ப்பாட்டத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர் திருச்சி என்.சிவா எம்.பி. கண்டன உரை நிகழ்த்தினார்.

சிவகங்கை மாவட்டம் கீழடியில், கடந்த 2014ம் ஆண்டு முதல் அகழாய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கீழடியில் பலவிதமான மணிக்கற்கள், சுடுமண் உருவங்கள், சதுரங்கக் காய்கள், தந்தத்தால் ஆன பகடைக்காய்கள், மான்கொம்புகள், கீறல் குறிகளுடன் கூடிய பானை ஓடுகள் உள்ளிட்ட பல்வேறு அரிய தொல் பொருட்கள் கண்டெடுக்கப்பட்டன.

கீழடியில் கிடைத்த தொல்பொருட்கள் அமெரிக்காவிலுள்ள பீட்டா பகுப்பாய்வகத்தில் ஆராயப்பட்டது. அதில் ஒரு பானை ஓடு கி.மு. 580 நூற்றாண்டைச் சேர்ந்தது என அறியப்பட்டது.

இந்நிலையில் கீழடி அகழாய்வு அறிக்கை ஒன்றிய தொல்லியல் துறையிடம் தாக்கல் செய்யப்பட்டது. கீழடி ஆய்வறிக்கைகளை இந்திய தொல்லியல் துறை இதுவரை வெளியிடவில்லை. கீழடி அகழாய்வில் இருந்து உலக அளவிலான ஆய்வகங்களுக்கு அனுப்பி, கரிமப் பகுப்பாய்வில் காலக் கணக்கீடு செய்யப்பட்ட மாதிரிகள், AMS அறிக்கைகளை அளித்த பின்னரும் மேலும் சான்றுகள் தேவை என்று கூறும் ஒன்றிய அரசுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கண்டனம் தெரிவித்திருந்தார்.

இதில் கீழடி குறித்த உறுதிமொழியும் ஏற்கப்பட்டது.

**திருச்சி என்.சிவா எம்.பி. கண்டன உரை!**

இந்நிலையில், கீழடி அகழாய்வுகள் அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்பட்ட பிறகும் அதை ஏற்று ஆய்வு முடிவுகளை வெளியிட மறுக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து தி.மு.க. மாணவரணி சார்பில் மதுரை விரகனூர் சுற்றுச்சாலையில் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாணவரணி செயலாளர் ராஜீவ் காந்தி தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் ஆயிரக் கணக்கான தி.மு.க.வினர் கலந்துகொண்டு, ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு எதிராக முழக்கங்களை எழுப்பினர்.

ஆர்ப்பாட்டத்தில் கழக துணைப் பொதுச் செயலாளரும், மாநிலங்களவை தி.மு.க. குழுத் தலைவருமான திருச்சி சிவா கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார். அப்போது திருச்சி சிவா எம்.பி. கண்டன

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்



கழக தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்புக்கு இணங்க கீழடி அகழ்வாராய்ச்சி குறித்து அறிவியல் பூர்வமாக பல்வேறு ஆதாரங்களை எடுத்து வைத்தும் ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசு அறிக்கை வெளியிடாததைக் கண்டித்தும் மாணவரணி சார்பில் மதுரை விரகனூர் பகுதியில் நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்பாட்டத்தில் மாநில மாணவரணிச் செயலாளர் இரா.ராஜீவ் காந்தி தலைமையில் கழக துணைப் பொதுச் செயலாளர் திருச்சி என்.சிவா எம்.பி. கண்டன உரையாற்றி, உறுதிமொழியேற்றார். உடன் மாவட்டச் செயலாளர்கள் கோ.தளபதி எம்.எல்.ஏ., சேடபட்டி மு.மணிமாறன், தங்கதமிழ்செல்வன் எம்.பி., மாநில நிர்வாகிகள் பொன்.முத்துராமலிங்கம், வ.வேலுசாமி, பெ.குழந்தைவேலு, ஜி.பி.ராஜா, இள.மகிழன், மாநில மாணவரணி துணைச் செயலாளர்கள் அதலை பி.செந்தில்குமார், பூர்ண சங்கீதா, மன்னை சோழ ராஜன், தமிழரசன், பி.எம்.ஆனந்த், கோகுல், வீரமணி, சட்டமன்ற உறுப்பினர்கள் தமிழரசி, ஆ.வெங்கடேசன், செல்வகுமார், மாவட்ட மாணவரணி அமைப்பாளர்கள், ஆதிசங்கர், துரை கோபால்சாமி (எ) அன்பு, பாண்டி முருகன் மற்றும் பல்லாயிரக்கணக்கான மாணவரணி நிர்வாகிகள், மாணவ–மாணவியினர், கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

### சென்னையில் ரூ.6.04 கோடி மதிப்பில்

# 50 கட்டணமில்லா குடிநீர் வழங்கும் தானியங்கி இயந்திரங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

சென்னை, ஜூன் 19 -

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.6.2025) சென்னை மாநகரில் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் 6.04 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள 50 கட்டணமில்லா குடிநீர் வழங்கும் தானியங்கி இயந்திரங்களை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக தொடங்கி விதமாக, சென்னை, மெரினா கடற்கரை நீச்சல் குளம் அருகில் அமைக்கப்பட்டுள்ள கட்டணமில்லா குடிநீர் வழங்கும் தானியங்கி இயந்திரத்தை தொடங்கி வைத்து, குடிநீரை அருந்தினார்.

சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மூலமாக பெருநகர சென்னை மாநராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் வழங்கல் மற்றும் பாதாள சாக்கடை திட்டப்பணிகள் சிறப்பான முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கான குடிநீர், பூண்டி, சோழவரம், புழலேரி, கண்ணன்கோட்டை தேர்வாய்கண்டிகை, செம்பரம்பாக்கம், வீராணம் ஆகிய ஏரிகள் மற்றும் கடல்நீரை குடிநீராக்கும் நிலையங்கள் வாயிலாக நாளொன்றுக்கு 1100 மில்லியன் லிட்டர் குடிநீர் சீரான முறையில் வழங்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில், பொதுமக்களின் நலன் கருதி முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் தானியங்கி குடிநீர் வழங்கும் இயந்திரங்கள் (Water Dispensing Unit) நிறுவி பொதுமக்களுக்கு கட்டணமில்லா தரமான குடிநீர் வழங்க சென்னை குடிநீர் வாரியத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், மணலி, மாதவரம், தண்டையார்பேட்டை, இராயபுரம், திரு.வி.க. நகர், அம்பத்தூர், அண்ணா நகர், தேனாம்பேட்டை, கோடம்பாக்கம், வளசரவாக்கம் மற்றும் அடையாறு ஆகிய மண்டலங்களில், தேர்தெடுக்கப்பட்ட இடங்களான பேருந்து நிலையங்கள், பூங்காக்கள், கோயில்கள், அரசு மருத்துவமனைகள், வணிக பகுதிகள், இரயில் நிலையங்கள், பள்ளிக்கூடம், கல்லூரி வளாகம், மெட்ரோ இரயில் நிலையம் மற்றும் மெரினா கடற்கரை என 50 இடங்களில் கட்டணமில்லா குடிநீர் வழங்கும் தானியங்கி இயந்திரங்கள் 6.04 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த தானியங்கி இயந்திரங்களை 3 ஆண்டுகளுக்கு இயக்கி பராமரிப்பதற்கான பணி ஆணைகளும் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், குடிநீர் விநியோக குழாயிலிருந்து 3,000 லிட்டர் முதல்

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

### இந்தியாவின் கவுரவம், ராஜதந்திரம் சிதைக்கப்படும்போது பிரதமர் மோடி அமைதியாக இருப்பது ஏன்?

**காங்கிரஸ் கேள்வி!**

புதுடெல்லி, ஜூன் 19 –

பாகிஸ்தான் ராணுவத் தளபதி ஜெனரல் அசிம் முனீர் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்புடன் மதிய உணவு அருந்த உள்ளார் என்ற செய்தி வெளியான நிலையில், மோடி அரசாங்கத்தின் மீது காங்கிரஸ் கட்சி சரமாரி குற்றச்சாட்டுக்களை தெரிவித்துள்ளது.

இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஜெய்ராம் ரமேஷ், இந்தியா – பாகிஸ்தான் இடையே போர் நிறுத்தத்தை ஏற்படுத்தியதாக அதிபர் டிரம்ப் 14 முறை கூறிய நிலையில், பிரதமர் மோடி அமைதியாக இருந்ததை சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போது பாகிஸ்தான் ராணுவ தளபதி உடன் அதிபர் டிரம்ப், மதிய உணவு அருந்த உள்ள நிலையில், இதற்காகத்தான், ஒரு நாள் முன்னதாக பிரதமர் மோடியைச் சந்திக்காமல் அதிபர் டிரம்ப் கிளம்பினாரா என்ற சந்தே கத்தை ஏற்படுத்துவதாக ஜெய்ராம் ரமேஷ் கேள்வி எழுப்பியுள்ளார்.

“இந்திய ராஜதந்திரம் சிதறடிக்கப்படுகிறது” என்றும் “பிரதமர் நரேந்திர மோடி முற்றிலும் அமைதியாக இருக்கிறார்” என்றும் ஜெய்ராம் ரமேஷ் குற்றம் சாட்டியுள்ளார்.